மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பேசிய, பேசுகிற எந்தப் பேச்சும் பதிவாகாது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு உட்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஒன்று உட்காருகிறீர்களா, அல்லது நான் பெயரைச் சொல்லி நடவடிக்கை எடுக்கட்டுமா ?

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டே இருந்தனர்.) (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு உட்பட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை

I name. The Members of the AIADMK Party please move out.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியேறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டே இருந்தனர்.)

6. தீர்மானம்.

பேரவைப் பணியினின்றும் சில உறுப்பினர்களைத் தற்காலிக நீக்கம் செய்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அவர்கள் வெளியேறத் தவறினால் அவர்களை ஒரு வாரம் தற்காலிக நீக்கம் செய்யும் தீர்மானத்தை இந்த அரசின் சார்பிலே முன்மொழியுமாறு பேரவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" இந்த அவையினுடைய கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் காப்பாற்றுவதற்கு மாறாக, அவை நடைபெறாமல் இருக்க, வேண்டுமென்றே இடையூறுசெய்துகொண்டு, எழுந்துநிற்கிற, எழுந்து நின்று, வேண்டுமென்றே தடை செய்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத்

தலைவரும், உறுப்பினர்களாக இன்றைக்கு வந்திருப்பவர்களும் இன்று ஒரு நாள் இந்தச் சட்டமன்றத்திலே இருந்து விலக்கி வைக்கப்படுகிறார்கள்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் தனிப்பட்ட முறையில் அல்லாமல், பொதுவாக, இந்த அவையில் தொடர்ந்து தொல்லைகளைத் தந்து கொண்டிருப்பவர்கள் என்ற முறையிலும், பேரவை விதிமுறைகளுக்கும் பேரவைத் தலைவருக்கும் கட்டுப்படாமல் இயங்குகிறவர்கள், அமைதியைக் குலைப்பவர்கள் என்ற முறையிலும் பேரவை முன்னவர் கொண்டு வந்த தீர்மானத்தைப் பேரவையின் முடிவிற்கு இப்பொழுது நான் விடுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சார்ஜன்டிற்கு வாட்ச் அன்ட் வார்ட்ஸை விட்டு அவர்களை வெளியேற்றுமாறு உத்தரவிடுகிறேன்.

(பேரவைக் காவலர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியே அழைத்துச் சென்றனர்.)

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

4. வரவு-செலவுத் திட்டம், 1989-90—பொது விவாதம்—தொடர்ச்சி:—

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் பாடலோடு தொடங்கப்பட்ட நிதிநிலை அறிக்கை குறித்த விவாதங்களுக்குப் பதிலளிக்கும் போதும், அவருடைய பாடலையே நினைவு கூர்ந்திட விரும்புகிறேன்.

'' கரை சேற்றால் தாமரையின் வாசம் போமோ !
காரிருள் தான் சூரியனை மறைப்பதுண்டோ !
பேரெதிர்ப்பால் உண்மை தான் இன்மையாமோ !''
(மேசையைத் தட்டும் ஒலி.)

என்று அந்தப் புரட்சிக் கவிஞன், பல ஆண்டுகளுக்கு முன்பு பாடி வைத்த அந்த உண்மை வரிகளை உள்ளத்திலே பதிய வைத்துக்கொண்டு என்னுடைய பதிலுரையைத் தொடங்குகின்றேன்.